நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வள்ளியூர்

முன்னிலை.- **திரு பி. மோசஸ் ஜெபசிங், பி.எஸ்சி., எம்.எல்.,**

நீதித்துறை நடுவர் , வள்ளியூர்

2026-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் - 07 ம் நாள் திங்கட்கிழமை

**பட்டியல் வழக்கு எண். 307/2020**

**CNR.No. TNTL09-001310-2020**

| | | |
|---|---|---|
| 1 | Name of the Court | Judicial Magistrate, Valliyoor |
| 2 | Name of the Judge | Thiru P. Moses Jebasingh, B.Sc., M.L., |
| 3 | Date of Judgment | 07.09.2026 |
| 4 | Case Number along with CNR No. | CC. 307/2020, Crime No. 339/2017<br>CNR.No. TNTL09-001310-2020 |
| 5 | Name of the parties of the case | Sub Inspector of Police, Valliyoor<br>Complainant. |
| | | 1. Muthu Durai ( Aged 20/207), S/o. Perumal, East street, Periyanadar Kudieruppu.<br>2. Sathiyamurugan ( Aged 19/2017), S/o. Rajadurai, Middle street, Bharati Nagar.<br>Accused. |
| 6 | Date of occurence | 16.08.2017 |
| 7 | Date of complaint | 04.10.2017 |
| 8 | Date of arrest if any and remand | 09.10.2017 (A1 and A2) |
| 9 | Period of remand of the accused | 09.10.2017- 13.10.2017 (A1 and A2) |
| 10 | Date of release on bail | 13.10.2017 (A1 and A2) |
| 11 | Date of Final Report | 18.12.2020 |
| 12 | Date of committal of case to the court of sessions. | Does not applicable |
| 13 | Date of questioning of the accused u/s 240 of code criminal procedure. | 21.10.2024 |
| 14 | Date of examination in chief and | Witnesses \| Chief \| Cross |

| | | | | |
|---|---|---|---|---|
| | cross examination of the witnesses. | PW1 | 27.07.2026 | No cross |
| | | PW2 | 27.07.2026 | No cross |
| | | PW3 | 17.08.2026 | No cross |
| | | PW4 | 02.09.2026 | No cross |
| | | PW5 | 02.09.2026 | 02.09.2026 |
| 15 | Date of Filing of all miscellaneous petitions and the results including the results on challenge before the superior courts except routine petitions like under section 317 of the code. | CrlMP | Petitions | Result |
| | | 6068/2017 | 451 of Crpc | Allowed |
| 16 | Date of examination of the accused under section 313 of the code | 07.09.2026 | | |
| 17 | Date of abscondance of an accused and his appearance/production as the case may be | ------ | | |
| 18 | Date of stay by superior courts and the results thereof | ------- | | |
| 19 | Date of commencement of trial | 21.10.2024 | | |
| 20 | Date of closure of trial | 07.09.2026 | | |
| 21 | Date of sentence of Order | --------- | | |
| 22 | Date of service of copy of Judgment to the accused | ---------- | | |
| 23 | If any delay, give explanation | This case was pending for serving summon to accused till 10.06.2024. Then pending for trial from 21.10.2024 But witness promptly not produced by prosecution. Hence, delay occured in this case. | | |

இவ்வழக்கானது கடந்த 18.12.2020 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 07.09.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்து, அரசுத் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் முன்னிலையாகியும், 1வது எதிரி தரப்பில்

கற்றறிந்த வழக்கறிஞர் திரு. T. முருகன் அவர்கள் முன்னிலையாகியும், 2 வது எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M. சுப்பையா அவர்கள் முன்னிலையாகியும், மேற்கண்ட வழக்கறிஞர்களின் வாத, பிரதிவாதங்களைக் கேட்டும், இது நாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்த ஆவணங்களை ஆராய்ந்தும், இறுதி பரிசீலனைக்குபின், இன்று இந்நீதிமன்றத்தால் அவையறிய பகரப்படும்..........

**தீர்ப்புரை**

1) இவ்வழக்கானது கடந்த 16.08.2017 ம் தேதி 9.30 மணிக்கு மடப்புரம் பஸ் ஸ்டாப்பிற்கு மேற்கே ரோட்டின் வடக்கு பக்கமுள்ள மரத்தடியில் நின்றிருந்த வழக்கின் புகார்தாரரர் சாட்சி 1 பச்சைமாலுக்கு சொந்தமான ரூ. 20,000/- மதிப்புள்ள TN 75 B 1245 பஜாஜ் பிளாட்டினா மோட்டார் சைக்கிளை எதிரிகள் இருவரும் ஆதாயம் கருதி திருடிச்சென்ற குற்றத்திற்காக எதிரிகள் மீது 379 இ.த.ச படி வள்ளியூர் காவல் உதவி ஆய்வாளர் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் குவிமுச பிரிவு 190(1) (b) ன் படி கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு குவிமுச பிரிவு 204 ன் படி எதிரிக்கு அழைப்பாணை சார்பு செய்ய உத்தரவிடப்பட்டது. இவ்வழக்கின் எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானதும் வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச.பிரிவு 207-ன் கீழ் இலவசமாய் வழங்கப்பட்டு போதிய அவகாசம் வழங்கிய பின்பு குற்றம் பற்றி வினவ எதிரிகள் குற்றத்தினை மறுத்தார்கள். ஆவணங்கள் பரிசீலனை செய்து எதிரிகள் மீது இதச பிரிவு 379 படி குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவ எதிரிகள் பொய் வழக்கு என்றார்கள். பின்னர் அரசுத்தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3) அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையான ஆவணங்களும், அ.சா.பொ.1 சான்றாவணமும் குறியீடு செய்யப்பட்டன.

**4. அரசுத்தரப்பு சாட்சிகள் மற்றும் ஆவணங்களிலிருந்து தெரியவரும் அரசுத்தரப்பு சாட்சிகளின் சுருக்கம் பின்வருமாறு.-**

4.1) அ.சா.1 திரு. பச்சைமால் தனது சாட்சியத்தில், சுமார் 8 வருடங்களுக்கு முன்பாக ஒருநாள் தனது இரு சக்கர வாகனத்தை பஸ் ஸ்டாப்பிற்கு மேற்கு பக்கம் நிறுத்திவிட்டு வேலைக்கு சென்றுவிட்டு வேலை முடிந்து வந்து பார்த்தபோது தனது இரு சக்கர வாகனத்தை காணவில்லை என்றும் தன்னுடன் வந்த நபர்களுடன் தானும் தேடிப்பார்த்ததாகவும், இது சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் மனு ( அ.சா.ஆ.1) கொடுத்ததாகவும், புகைப்படத்திலுள்ள வாகனம் தன்னுடையதுதான் என்றும், புகைப்படம் அ.சா.பொ.1 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

4.2) சம்பவ சாட்சியான அ.சா.2 திரு. பரமசிவன், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி சாட்சிகளான அ.சா.3 திரு. நெல்சன் மற்றும் அ.சா.4 திரு. குரூஸ்மாணிக்கம் ஆகியோர்கள் அரசு தரப்பிற்கு ஆதரவளிக்காமல் பிறழ் சாட்சியமளித்துள்ளார்கள்.

4.3) அ.சா.3 திரு. நெல்சன் தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது கையொப்பம் ( அ.சா.ஆ.2 ) மற்றும் அத்தாட்சியிலுள்ள இரண்டாவது கையொப்பம் ( அ.சா.ஆ.3) தன்னுடையதுதான் என்றும், அ.சா.4 திரு. குருஸ்மாணிக்கம் தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையொப்பம் ( அ.சா.ஆ 4 ) மற்றும் அத்தாட்சியிலுள்ள முதலாவது கையொப்பம் ( அ.சா.ஆ.5) தன்னுடையதுதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

4.4) அ.சா.5 திரு. முருகன் தனது சாட்சியத்தில், கடந்த 04.10.2017 அன்று 8.30 மணிக்கு தலைமைகாவலர் திரு. திரவியகுமார் என்பவர் புகார்தாரர் பச்சைமால் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று குற்ற எண். 339/2017 இதச பிரிவுகள் 379 படி முதல் தகவலறிக்கை (அ.சா.ஆ.6) பதிவு செய்து ஒரு நகலை உதவி ஆய்வாளர் திரு. சஜீவ் அவர்களுக்கும், சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை நீதிமன்றத்திற்கு அனுப்பியதாகவும், மேற்படி வழக்கை உதவி ஆய்வாளர் திரு.

சஜுவ் அவர்கள் அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றையதினம் 9.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராஜ்குமார் மற்றும் வேலு ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர்( அ.சா.ஆ.7), மாதிரிவரைபடம் (அ.சா.ஆ.8) தயார் செய்துள்ளதாகவும், பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல்5 மந்நும் 9 ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், வழக்கின் எதிரிகள் விஜயநாராயணம் காவல்நிலைய குற்ற எண். 148/2017 வழக்கில் கைது செய்யப்பட்டபோது இவ்வழக்கிலும் ஈடுபட்டதாக கூறியதன் அடிப்படையில் எதிரிகளை சம்பிரதாய கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், பின்னர் பட்டியல் சாட்சிகள் 6 முதல் 8 வரையிலான சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து தடயப்பொருளை படிவம் 91 மூலம் நீதிமன்றம் அனுப்பிவைத்ததாகவும், எதிரிகள் மீது குற்றம் உண்மை என தெரியவந்தததால் இதச பிரிவு 379 படி குற்ற அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள் சாட்சியமளித்துள்ளார்.

5) அரசு தரப்பு சாட்சிகள் விசாரிக்கப்பட்டு சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு பாதகம் தரக்கூடிய அம்சங்களை குறித்து எதிரிகளிடம் குற்றவிசாரணை முறைச்சட்டம் பிரிவு 313(1)(ஆ)-ன் கீழ் வினவிய போது எதிரி பொய் சாட்சி என்று தெரிவித்தார். தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றார். எனவே எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**6) இவ்வழக்கில் நாம் தற்போது தீர்மானிக்க வேண்டியது யாதெனில், எதிரிகள் மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

6.1) எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவு 379 ன் படியான குற்றச்சாட்டு தகுநிலை ஐயப்பாடுகளுக்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதை ஆராய்கையில், இவ்வழக்கில் புகார்தாரர் பச்சைமால் என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில்

வழக்கு பதிவு செய்யப்பட்டு எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி புகார்தாரர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் சுமார் 8 வருடங்களுக்கு முன்பாக ஒருநாள் தனது இரு சக்கர வாகனத்தை பஸ் ஸ்டாப்பிற்கு மேற்கு பக்கம் நிறுத்திவிட்டு வேலைக்கு சென்றுவிட்டு வேலை முடிந்து வந்து பார்த்தபோது தனது இரு சக்கர வாகனத்தை காணவில்லை என்றும் தன்னுடன் வந்த நபர்களுடன் தானும் தேடிப்பார்த்ததாகவும், இது சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் மனு (அ.சா.ஆ.1) தன்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள வாகனம் தன்னுடையதுதான் என்றும், மேற்படி வாகனத்தை தான் நீதிமன்றத்திலிருந்து பெற்றுக்கொண்டதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

6.2) அ.சா.1 சாட்சியத்தின் மூலம் அ.சா.1ன் இருசக்கர வாகனம் திருடுபோயுள்ளதும், இதுசம்பந்தமாக அ.சா.1 புகார் கொடுத்துள்ளார் எனவும் தெரிய வருகிறது. ஆனால் மேற்படி வாகனத்தினை எதிரிகள் தான் திருடிச் சென்றார்களா? என்பது பற்றி முடிவு செய்ய வேண்டியுள்ளது.

6.3) அரசு தரப்பில் இவ்வழக்கின் எதிரிகளை கைது செய்தபோது எதிரி முத்துதுரை , அ.சா.3 திரு. நெல்சன், அ.சா.4 திரு. குரூஸ்மாணிக்கம் ஆகியோர்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கில் திருடிச் சென்றதாக சொல்லப்படும் வழக்கு சொத்துக்களை எதிரிகளிடமிருந்து கைப்பற்றியதாக சொல்லப்படும் சங்கதிகள் அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதை ஆராய்கையில் மேற்படி ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான திரு. நெல்சன் அ.சா.3 ஆகவும், திரு. குரூஸ்மாணிக்கம் அ.சா.4 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

6.4) ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் மற்றும் அத்தாட்சி சாட்சிகளான அ.சா.3 மற்றும் அ.சா.4 தங்களது சாட்சியத்தில் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியிலுள்ள கையெழுத்துக்கள் தங்களுடையதுதான் என்றும், இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் கூறி அரசு தரப்பிற்கு ஆதரவு அளிக்காமல் பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்கள். அரசு

தரப்பில் மேற்படி சாட்சிகளை பிறழ் சாட்சிகளாக பாவித்து நீதிமன்ற அனுமதி பெற்று குறுக்கு விசாரணை செய்தபோதிலும் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியங்கள் எதுவும் துலங்கவில்லை. எனவே அரசு தரப்பில் தடயப்பொருள் கைப்பற்றுதல் தகுநிலை ஐயப்பாட்டிற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை. எனவே இவ்வழக்கில் எழும் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்வதே நீதியின் பால் சரியானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

7) முடிவாக, எதிரிகள் மீதான இதச பிரிவு 379 படியான குற்றச்சாட்டு தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால், மேற்படி எதிரிகளை மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து, எதிரிகளை கு.வி.மு.ச.பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

8) இவ்வழக்கில் பி. ஆர்எண். 273/2017 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு சொத்தை அதன் உரிமையாளர் இடைக்காலமாக பெற்றுச்சென்றுள்ளதை இவ்வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அவரே வைத்துக்கொள்ளவும், அவர்கள் எழுதிக்கொடுத்த பிணை முறியை ரத்து செய்யவேண்டுமென்றும், வழக்கு சொத்திற்கான புகைப்படத்தை வழக்கு கோப்பில் வைக்கவேண்டுமென்றும் குவிமுச 452 ன் கீழ் உத்தரவிடப்படுகிறது. ( பி.ஆர்.எண். 273/2017)

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தாளருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 07 ம் நாள் இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

MOSES JEBASINGH

Digitally signed by MOSES JEBASINGH
Date: 2026.09.07 19:17:45 +0530

**நீதித்துறை நடுவர்,**

**வள்ளியூர்.**

**<u>அரசுத்தரப்பு சாட்சிகள்.-</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. பச்சைமால் |
| அ.சா.2 | திரு.பரமசிவன் |
| அ.சா. 3 | திரு.நெல்சன் |
| அ.சா. 4 | திரு. குரூஸ்மாணிக்கம் |
| அ.சா. 5 | திரு. முருகன் ( சிறப்பு உதவி ஆய்வாளர்) |

**<u>அரசுத்தரப்பு சான்றாவணங்கள்.-</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 04.10.2017 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | 26.09.2017 | ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள அ.சா.3 ன் இரண்டாவது கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | 26.09.2017 | அத்தாட்சியிலுள்ள அ.சா.3 ன் இரண்டாவது கையொப்பம் |
| அ.சா.ஆ.4 | 26.09.2017 | ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள அ.சா.4 ன் முதல் கையொப்பம் |
| அ.சா.ஆ.5 | 26.09.2017 | அத்தாட்சியிலுள்ள அ.சா.4 ன் முதல் கையொப்பம் |
| அ.சா.ஆ.6 | 04.10.2017 | முதல் தகவலறிக்கை |
| அ.சா.ஆ.7 | 04.10.2017 | பார்வைமகஜர் |
| அ.சா.ஆ.8 | 04.10.2017 | மாதிரிவரைபடம் |
| அ.சா.ஆ.9 | 26.09.2017 | ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.10 | 26.09.2017 | அத்தாட்சி |
| அ.சா.ஆ.11 | 11.10.2017 | படிவம் 91 |

**அரசு தரப்பு சான்று பொருள்** -

| | | |
|---|---|---|
| அ.சா.பொ.1 | - | வழக்கு சொத்திற்கான புகைப்படம் |

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** - இல்லை.

MOSES JEBASINGH

Digitally signed by MOSES JEBASINGH
Date: 2026.09.07 19:17:51 +0530

**நீதித்துறை நடுவர்,**

**வள்ளியூர்.**

குறிப்பு

1. வழக்கின் முடிவு பற்றி காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.
3. எந்த ஒரு சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைத்து விசாரிக்கப்படவில்லை.

நகல்.... 1) மாண்புமிகு தலைமை குற்றவியல் நடுவர், திருநெல்வேலி.